குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண் 11/2023

ம.சா. 2

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் தேதி புதன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபி | தொழில் | |
| தந்தை பெயர் | வெங்கடாசலபதி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 12.19 மணி,

Complainant Govindharaju present. Advocate Mr.K.Vignesh present for Complainant. Accused Venu present. Advocate Mr.P.Soundararajan present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் கேட்டரிங் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஆங்கிலம் நன்றாக படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிப்பேன், ஆங்கிலம் படிப்பேன் சரிவர எழுத தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை படித்து பார்த்து தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நான் மஜ்ராகொல்லப்பட்டியில் வசித்து வருகிறேன். புகார்தாரர் மாரமங்கலத்துபட்டியில் குடியிருந்துவருகிறார். என்னுடைய ஊருக்கும் புகார்தாரரின் ஊருக்கும் சுமார் 4 கி.லோ மீட்டர் தூரம் இருக்கும்.

2. நான் வெள்ளி பட்டறை வைத்து நடத்தி வருகிறேன் மற்றும் நிலத்தரகராக இருக்கிறேன். புகார்தாரர் எனது நண்பர் ஆவார். புகார்தாரர் நிலத்தரகராக இருந்து வருகிறார். புகார்தரரை எனக்கு 9 வருடமாக தெரியும். புகார்தாரரும் ஆஜர் எதிரியும் நண்பர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிக்கு புகார்தாரர் கடன் கொடுக்கும் போது நான் உடனிருந்தேன் என்று எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், எதற்காக அந்த நேரத்தில் புகார்தாருடன் இருந்தேன் என்றால் தொழில் சம்பந்தமாக வாரம் ஒன்று அல்லது இரண்டு முறை சந்தித்து பேசுவோம்.

3. 25.09.2022 ம் வருடம் நான் மெடிக்கல் காலேஜ் எதிரில் வின்சென் பள்ளியின் அருகில் உள்ள கவுண்டர் டீ கடையில் இருந்தேன். மேற்படி டீ கடையில் தான் என் முன்னிலையில் ஆஜர் எதிரிக்கு புகார்தாரர் பணத்தை கொடுத்தார். அப்போது டீ கடையில் சுமார் 10 பேர் இருந்திருப்பார்கள், நானும் தூரமாக இருந்தேன், என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

நீதிமன்றத்திற்கு வந்த பின்பு தான் ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்ததாகவும், அதற்கு எதிரி காசோலை கொடுத்ததாகவும் புகார்தாரர் கூறினார் என்றால் சரி.

4. நான் சொல்வது போல் புகார்தாரர் ஆஜர் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் ஆஜர் எதிரி காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. 25.09.2022 ம் தேதி என்ற பின் தேதியிட்ட காசோலையை எதிரி கொடுத்துள்ளதாக எனது பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள நிலையில் பத்தி 2 ல் 21.10.2021 ம் தேதி காசோலையை புகார்தாரரின் வங்கி கணக்கில் செலுத்தியிருக்க முடியாது என்பதால் வழக்கை பற்றி எந்த விபரமும் தெரியாமல் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. ஆஜர் எதிரி பற்றி எனது பிரமாண பத்திரிக்கையில் நான் தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில் அவர் எந்த ஊர் என்றால் கருப்பூர். ஆஜர் எதிரி கருப்பூர் புகார்தாரர் சொல்லியதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் எனது முன்னிலையில் புகார்தாரருக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் எவ்வித பணப் பரிவர்தணையும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

6. ஆஜர் எதிரியும் புகார்தாரரும் உறவினார்கள் என்பதாலும், அவர்களுக்கு இடையே ஏற்பட்ட மனக்கசப்பினாலும் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ள நிலையில் புகார்தாரர் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.37 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.